**12.07.2023 அ.வ.எண்.25/2022 வா.சா.1 முபீனா, க/பெ. ரசூல்**

**குறுக்கு விசாரணை 13,14 பிரதிவாதிகள் தரப்பு**

எனக்கும் என் கணவர் ரசூலுக்கும் இஸ்லாமிய மத சட்டப்படி தான் திருமணம் நடந்தது. 22.12.2013 என் திருமணம் நடந்தது. நான் இளங்கலை பட்டப்படிப்பில் முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த போதே திருமணம் நடந்தது. அதன் பிறகு படிக்கவில்லை. என் மாமனார் மற்றும் என் கணவர் தொழில் தொடங்கவும் சொத்து வாங்கவும் நான் உதவி செய்ததாக சொல்லியிருப்பதில் எந்தெந்த சொத்து எனது உதவியில் வாங்கப்பட்டது என்பதையும் எந்த தொழில் தொடங்கப்பட்டது என்பதையும் நான் குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் எனது நகைகள் மற்றும் என் தந்தை கொடுத்த தொகை ஆகியவற்றை என் மாமனார் மற்றும் கணவர் கேட்கும் போதெல்லாம் கொடுத்தேன். அவர்கள் என்ன சொத்து வாங்கினார்கள் என்பதை என்னிடம் சொல்லமாட்டார்கள் எனவே அது விவரம் எனக் தெரியாது. நான் அதனை குறிப்பிடவில்லை. என் மாமனார் பெயரில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் என் திருமணத்திற்கு முன்னரே அவர் பெயரில் வாங்கப்பட்டவை என்பது சரிதான். 13ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்துக்களும் என் திருமணத்திற்கு முன்னரே வாங்கப்பட்டவை என்பது சரிதான். எனது உடல் உழைப்பையும் சொத்துக்களையும் கொண்டு பிற சொத்துக்கள் வாங்கப்பட்டதாக நான் கூறுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் என்னிடம் ஏதும் இல்லை. ஆவணங்கள் அனைத்தும் 14ம் பிரதிவாதியிடம் உள்ளது. என் கணவர் பெயரில் கிரையம் பெற்ற ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை அதுவும் 14ம் பிரதிவாதியிடம் உள்ளது. அது பதிவுக் கிரையம் தான். அதற்கு நான் நகல் பெற்று தாக்கல் செய்யவில்லை என்பது சரிதான். எனது திருமணத்திற்கு முன்னரே என் மாமனார் நல்ல வருவாய் ஈட்டும் தொழில்களை செய்து வசதியாக இருந்தார் என்றால் அது சரியல்ல. எனது திருமணத்திற்கு முன்னர் என் மாமனார் காய்கறி வியாபாரம் தான் செய்தார். என் திருமணத்திற்கு பிறகு தான் கல்குவாரி குத்தகைக்கு எடுத்து தொழில் செய்தார். எனது திருமணத்திற்கு முன்னரே என் மாமனார் கல்குவாரி சம்மந்தமான வேலைகளை செய்துவந்தார் என்றும் அது விவரம் எனக்கு தெரியாததால் நான் தற்போது தவறாக சொல்கிறேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. 14ம் பிரதிவாதிக்கு 100 பவுன் நகையும் அடிமனை கிரையமும் கொடுத்ததற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்பது சரிதான். அதற்கான ஆவணமும் 14ம் பிரதிவாதியிடம் தான் உள்ளது. 13ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீடு அவரது தனிப்பட்ட வருமானம் மூலம் கிரையம் பெறப்பட்டது என்றால் அது சரியல்ல. அது என் மாமனார் மற்றும் கணவரின் உழைப்பின் மூலம் கிரையம் பெற்று கொடுக்கப்பட்டது. 2013 ஜனவரியில் வீட்டை கட்டிக் கொடுத்தாக தெரிந்து கொண்டேன். என் கணவர் 01.09.2020 அன்று இறந்தார். அவர் சென்னைக்கு மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து செல்லும் வழியில் இறந்துவிட்டார். என் மாமியார் என் கணவரை அழைத்து சென்றார். நான் உடன் செல்லவில்லை. கைக்குழந்தை இருந்ததால் கொரனா சமயத்தில் அனுமதிக்கமாட்டார்கள்

என்பதால் நான் செல்லவில்லை. என் கணவர் மூச்சுதினறலால் பாதிக்கப்பட்டிருந்தார். என் கணவர் திடீர் உடல்நலக் குறைவால் இறந்துவிட்டார் என்பது சரிதான். என் கணவர் இறப்புக்கு 13,14 பிரதிவாதிகள் தான் காரணம் என நான் சொல்லியிருப்பது தவறு என்றால் தற்போதும் எனக்கு அந்த சந்தேகம் உள்ளது. அந்த சந்தேகம் என் கணவர் இறந்ததிலிருந்தே உள்ளது. அது சம்மந்தமாக புகார் ஏதும் கொடுக்கவில்லை. வழக்கிற்காக 13, 14 பிரதிவாதிகள் மீது பொய் குற்றச்சாட்டு சொல்கிறேன் என்பது சரியல்ல. கல்குவாரி இருக்கும் நிலம் என் மாமனார் பெயரில் உள்ளது என்பது சரிதான். அது 36 ஏக்கர் நிலம் ஆகும். அதில் கல்குவாரி நடத்த 5 ஏக்கருக்கு அனுமதி பெறப்பட்டது என்பது சரிதான். கல்குவாரியில் சக்கைக்கல் வெட்டி எடுக்க அனுமதி பெறப்பட்டது. கல்குவாரி என் மாமனார் பெயரில் இருந்தது. அவரிடம் இருந்து சக்கைக்கல் பெற்று அதனை ஜல்லியாக உடைத்து விற்பனை செய்யும் தொழிலை அவரும், என் கணவரும் மற்றும் கோவிந்தன் என்பவரும் பங்குதாரர்களாக இருந்து நடத்தினார்கள். அந்த கூட்டாண்மையை பதிவு செய்திருந்தார்கள். என் மாமனார் இறந்த பிறகு சக்கைக்கல் வெட்டி எடுக்கும் உரிமத்தை மாற்ற முயன்ற போது எனது மாமியார் மற்றும் எனது பெயரில் மாற்ற முடிவானது ஆனால் ஒருவருக்கு தான் உரிமம் கொடுக்கப்படும் என்றதால் என் பெயரில் உரிமம் பெறப்பட்டது. கனிம வளத்துறை உதவி இயக்குநரிடம் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பம் அளித்தேன். எனது மாமனாருக்கு நான் மருமகள் என்ற வகையில் என் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. என் மாமனாருக்கு உரிய வாரிசு சான்று அப்போது பெறப்படவில்லை. வாரிசு சான்று கோரி விண்ணப்பித்த விண்ணப்ப நகல் காட்டப்பட்டது. அதில் என் பெயர் இருந்ததால் என் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. என் மாமனாரின் வாரிசுகள் அனைவரும் ஆட்சேபனை இல்லை என எழுதிக் கொடுத்தால் தான் என் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய முடியும் என்பது சரிதான். வாரிசுகள் அனைவரும் அவ்வாறு எழுதிக் கொடுத்தனர். அதன் அடிப்படையில் தான் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. என் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்ட உரிமத்தை பதிவு செய்த தேதி எனக்கு நினைவில்லை. அந்த குத்தகை ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் இல்லை. வாரிசு உரிமைக்கும் சொத்து உரிமைக்கும் உள்ள வித்தியாசம் என்ன எனக் கேட்டால் எனக்கு தெரியாது. முதலில் வாரிசு சான்று வழங்கப்பட்ட தேதி 20.07.2021 ஆக இருக்கும் என நினைக்கிறேன். வழக்குரையில் 10.07.2021 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். முதலில் வழங்கப்பட்ட வாரிசு சான்றில் என் பெயர் இருந்ததால் இஸ்லாமிய சட்டப்படி நான் வாரிசு அல்ல என்றும் அதனால் என் பெயரை நீக்க வேண்டும் என்றும் கேட்டு 13ம் பிரதிவாதி மனு கொடுத்தார் என்றால் ஆமாம் கொடுத்தார். அந்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப்படாததால் 13ம் பிரதிவாதி உயர்நீதிமன்ற உத்தரவு பெற்று அதன் அடிப்படையில் கோட்டாட்சியர் விசாரணை நடந்தது என்பது சரிதான். அதன் முடிவில் முந்தைய வாரிசு சான்று ரத்து

செய்யப்பட்டு வட்டாட்சியர் புதிய விசாரணை செய்து மீண்டும வாரிசு சான்று வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது என்பது சரிதான். அதன் அடிப்படையில் வட்டாட்சியர் என்னையும் இதர நபர்களையும் விசாரணைக்கு அழைத்தார் என்பது சரிதான். கோட்டாட்சியரின் உத்தரவை எதிர்த்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஆட்சேபனை மனு தாக்கல் செய்தோம். அதனை நேரடியாகவும் கொடுத்தேன். பதிவுத் தபால் மூலமும் அனுப்பினேன். கோட்டாட்சியரின் உத்தரவை இடைக்காலமாக நிறுத்தி வைக்க கோரினேனா எனக் கேட்டால் ஆமாம் கோரினேன். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் அத்தகைய உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை என்றால் அவர் உத்தரவு பிறப்பிக்கும் முன்னரே புதிய வாரிசு சான்றை மறுநாளே வட்டாட்சியர் வழங்கியுள்ளார். வட்டாட்சியர் சட்டப்படி புதிய வாரிசு சான்றை வழங்கினார் என்றால் அது சரியல்ல. என் மாமனாருக்கு வழங்கப்பட இருந்த நிலுவைத் தொகை குறித்து அறிவிப்பு வந்த போது தான் புதிய வாரிசு சான்று வழங்கப்பட்ட விவரம் எனக்கு தெரிய வந்தது. அந்த தேதி என்ன என்பது ஞாபகம் இல்லை. என் மாமனார் சாலை ஒப்பந்தப் பணிகள் 2ஐ பெற்றிருந்தார் என்பதும் அவரது இறப்பால் அந்த பணிகளை நிறைவேற்ற இயலாமல் கால தாமதம் ஆனது என்றும் சொன்னால் அந்த சாலைப் பணிகளை 15ம் பிரதிவாதி பெயரில் மாற்றி முடிக்கப்பட்டது. அவ்வாறு சாலைப் பணிகளை பெயர் மாற்றம் செய்ய கொடுத்த விண்ணப்பத்திற்கு புதிதாக வழங்கப்பட்ட வாரிசு சான்றை இணைத்திருந்தேன் என்றும் எனவே 07.04.2022 அன்றே புதிய வாரிசு சான்று பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றும் சொன்னால் புதிய வாரிசு சான்றை நான் கொடுக்கவில்லை. அதனை 13, 14 பிரதிவாதிகள் எல்லா அலுவலகங்களிலும் ஏற்கனவே கொடுத்திருந்தார்கள். புதிதாக வழங்கப்பட்ட வாரிசு சான்றை நான் ஏற்கவில்லை. புதிய சான்று இஸ்லாமிய சொத்துரிமை அடிப்படையில் வழங்கப்பட்டதா என்பது எனக்கு தெரியாது. புதிய வாரிசு சான்று அடிப்படையில் சொத்துரிமை கோர இயலாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் அற்று போய்விட்டது என்றால் அது சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**